**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No.1890/2023

DEPOSITION OF WITNESS FOR PW-2

| | | |
|---|---|---|
| NAME | : | திரு. வேல்முருகன் |
| Father/ Husband NAME | : | திரு. கிருஷ்ணன் |
| VILLAGE | : | பாளையங்கோட்டை |
| TALUK | : | பாளையங்கோட்டை |
| CALLING | : | மனுதாரர் தரப்பு சாட்சி |
| AGE | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 3rd day of July 2025.

முதல் விசாரணை :–

நான் இவ்வழக்கில் 3ம் நபர். என்னுடைய சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் சா.சா.ஆ.1. ஆகும்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தில் இறந்துபோன சுடலையாண்டி எனக்கு உறவினர் என்றால் இல்லை எனது நண்பர். விபத்து நடந்த ரோடு பாளையங்கோட்டை – டு – திருச்செந்தூர் செல்லும் கிழமேல் ரோடு என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் பாளையங்கோட்டை போலிஸ் குவார்ட்டஸ் முன்பு என்றால் சரிதான். அது ஜனநாடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். நான் சென்று பார்க்கும்போது காயம்பட்ட சுடலையாண்டியை ரோட்டின்

ஓரமாக வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்த்தேன். இந்த விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. வேறு நீதிமன்றத்திலும் விபத்து சம்மந்தமாக நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பாக்காமல் விபத்தில் இறந்துபோனவர் எனக்கு நன்கு அறிமுகமானவர் என்பதால் மனுதாரர்கள் நஷ்டஈடு பெறுவதற்காக பார்க்காத விபத்தை பார்த்தாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.